**தலைப்பு 112 - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 112 – வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 05 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியானதாகவும் மற்றும் நிதி முறையாகவும் செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத்திட்டம் முறையாக தயாரிக்காமை | 2.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் அவர் தனது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்றதெனவும் | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள் உள்ளமை. | 2.3(அ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு | 1. கட்டுநிதிக்கணக்கிலுள்ள குறைபாடு. | 2.6 |
| | | 2. பொது வைப்புக் கணக்கிலுள்ள குறைபாடு | 2.7 |
| | | 3. வங்கிக் கணக்கு செயற்படுத்தலில் குறைபாடு | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| | இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | | |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற்கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.4 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக முற்பணங்களிலுள்ள குறைபாடு | 2.5 |

**2. போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 செயலாற்றல்**

---

**திட்டமிடல்**

---

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்காக அமைச்சு மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் காலப்பகுதி (Time Line)மற்றும் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் / பெறுபேறுகள் (Output/Outcome)வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.2 பெறுகைச் செயன்முறையினூடாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

---

அரசின் கொள்வனவு வழிகாட்டலுக்கமைவாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 338.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,211.8 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.

| செலவுத் தலைப்பு | செலவினத் தலைப்பு விபரம் | மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடு | பயன்பாடு | சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வழங்கல்** | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 80.2 | 80.2 | - |
| 1203 | உணவுபானம் மற்றும் சீருடை | 2.6 | 2.6 | - |
| 1205 | ஏனையவை | 7.5 | 7.5 | - |
| | **மூலதனச் சொத்துக்களைப் கையேற்றல்** | | | |
| 2101 | வாகனங்கள் | 83.0 | 78.2 | 4.8 |
| 2102 | தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 84.9 | 69.9 | 15.0 |
| 2103 | பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 19.7 | 15.8 | 3.9 |
| 2104 | கட்டிட மற்றும் உட்கட்டமைப்பு | 923.9 | 79.0 | 844.9 |
| 2105 | காணி மற்றும் காணி விரிவாக்கம் | 10.0 | 5.0 | 5.0 |
| | **மொத்தம்** | **1,211.8** | **338.2** | **873.6** |

### 2.2.1 பெறுகை செய்முறையை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3.26 மில்லியன் கிரயத்தில் அமைச்சு செயலாளர் அலுவலகம் மற்றும் அரச அமைச்சுக்கள் அலுவலகங்களின் தளபாட கூரையினை புனைதல் மற்றும் பொருத்துதல் போன்றவற்றிற்கான பெறுகையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கடையிடல் செய்முறையின் கீழான விலைகளை கோரும் போது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விலைமனு திறத்தல் குழுவானது பெறுகைக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்காததுடன் விலைமனு திறத்தல் செய்முறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மடிக்கணனிகள், லேசர் பிறின்டர்கள் மற்றும் அல்ரா வலு வழங்கல்களுடன் தொடர்பான ரூபா 7.62 மில்லியன் தொகையான பெறுகையின் பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணனிகள், லேசர் பிறிண்டர்கள் மற்றும் அல்ரா வலு வழங்கல்களினை கொள்வனவு செய்கையில் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகையில் தெரிவு செய்யப்பட்ட வழங்கல் நிறுவனங்களால் கொடுக்கல் விலை மனு பத்திரங்களின் அத்தகைய உபகரணங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2017 மார்ச் 21 இல் காலாவதியாகியிருந்தது.

(iii) 2017 இன் பெறுகைத்திட்டத்தின் பிரகாரம், 31 கணனிகள் மற்றும் 11 பிறிண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், திட்டத்திற்கு முரணாக 27 பிறின்டர்கள், 42 அல்ரா வலு வழங்கல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 சொத்து முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்ட சில விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | பிரிவுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்ற காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | மலேசியாவிலுள்ள கோலாலம்பூர் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் சொந்தமாக்கப்பட்ட புத்தராஜா காணி | 1.681 ஏக்கர்கள் | யூ.எஸ்.டீ 1.2 மில்லியன்கள் | ஆண்டு 2007 – 2018 |
| (ii) | கட்டிடங்கள் | | | |
| | • கன்வீராவிலுள்ள 01 உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் சொந்தமாக்கப்பட்ட கட்டிடம் | 01 | யூ.எஸ்.டீ 2.5 மில்லியன்கள் | 2007 - 2018 |
| | • மேற்கூறப்பட்டவாறு | 01 | | 2012 - 2018 |
| | • ஸ்ரொக்கலவிலுள்ள தூதரின் வதிவிட அலுவலகம் | 01 | ரூபா 277.3 மில்லியன்கள் | 2011 – 2018 |

உடன்படிக்கையின் பிரகாரம் திருத்தங்கள் முடிவடைந்த பின்னர் 2016 பெப்ரவரி 21 இல் மலேசியா கோலாலம்பூரிலுள்ள உயர்ஸ்தானிகர் அலுவலக வதிவிடத்தை கையளிக்கத் தவறியமையால் 532,000 மலேசியா றிங்கிற்க்கான (ஆர்எம்) கூட்டுத்தொகையான குத்தகை வாடகையானது 2016 மார்ச் இலிருந்து 2018 யூன் 30 வரையிலான காலப்பகுதி தொடர்பில் உயர்ஸ்தானியரால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வீட்டிற்காக செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களால் சொந்தமாக்கப்பட்ட சொத்துக்களை பயன்படுத்தல்**

உச்சிமாநாடு குடியிருப்பு கட்டிடத்தில் வசிக்கின்ற வெளிநாட்டு சேவையின் அலுவலகர்கள் எல்விற்றிஹல மாவத்தையில் வீடு நிர்மாணம் பூர்த்தியடைந்த பின்னர் வெளியேற வேண்டும் என 2000 ஒக்தோபர் 25 இல் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், எல்விற்றிஹல மாவத்தையில் வீடுகளை நிர்மாணித்தல் பூர்த்தியடைந்திருந்த போதிலும் பொது நிர்வாக அமைச்சிற்கு சொந்தமான 07 உச்சிமாநாடு குடியிருப்பு கட்டிடங்கள் கையளிப்பதற்கு 2018 ஆகஸ்ட் 28 இலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 7,718 | 7,702 | 16 | 0.2 |
| | மூலதனம் | 2,422 | 2,303 | 119 | 4.9 |
| | **மொத்தம்** | **10,140** | **10,005** | **135** | **1.3** |
| 2014 | மீண்டெழுபவை | 8,827 | 8,813 | 14 | 0.2 |
| | மூலதனம் | 1,236 | 956 | 280 | 22.6 |
| | **மொத்தம்** | **10,063** | **9,770** | **293** | **2.9** |
| 2015 | மீண்டெழுபவை | 9,025 | 8,011 | 1,014 | 11.2 |
| | மூலதனம் | 1,081 | 533 | 548 | 50.6 |
| | **மொத்தம்** | **10,106** | **8,544** | **1,562** | **15.4** |
| 2016 | மீண்டெழுபவை | 9,450 | 8,941 | 509 | 5.4 |
| | மூலதனம் | 520 | 420 | 100 | 19.2 |
| | **மொத்தம்** | **9,970** | **9,361** | **609** | **6.1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டெழுபவை | 9,677.23 | 9,622.99 | 54.24 | 0.6 |
| | மூலதனம் | 1,334.64 | 326.19 | 1,008.45 | 75.6 |
| | **மொத்தம்** | **11,011.87** | **9,949.18** | **1,062.69** | **9.6** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட முழு ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ஏற்பாட்டை பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் உரிய செலவின விடயங்களின் 22 சதவீதத்திலிருந்து 90 சதவீத வீச்சில் வரையிலிருந்தது.

### 2.5. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 11201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 35 | 33.23 | 28 | 29.12 | 130 | 110.10 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்க கூற்றின் பிரகாரம், அத்திகதியிலுள்ளவாறான மொத்த நிலுவையான தொகை ரூபா 4.14 மில்லியன் தொகையானது அத்தகைய நிலுவையினது 01 வருடம் தொடக்கம் 23 வருடங்கள் வரையிலான வீச்சிலிருந்தது. அமைச்சானது அத்தகைய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதியிலும் 5 வருடங்களை விட மேலதிகமாகவிருந்த ரூபா 1.51 மில்லியன் கூட்டுத்தொகையான இனங்காணப்படாத கடன் மீதிகள் தொடர்பில் அமைச்சால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் அமைச்சால் வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகையான முற்பணமொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 யூன் 30 இல் உள்ளவாறு வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் அலுவலகங்களின் தீர்க்கப்படாத முற்பணங்கள் ரூபா 318.08 மில்லியன் கூட்டுத்தொகையாகும். அத்தகைய மீதிகளில் 2 வருடங்களை விட கூடிய ரூபா 99.88 மீதியொன்றும் 2 தொடக்கம் 5 வருடங்களை விட கூடிய ரூபா 110.70 மில்லியன் மீதியொன்றும் 05 வருடங்களை விட கூடிய ரூபா 107.49 மில்லியன் மீதியொன்று இருந்தது.

**2.7 பொதுவைப்புக் கணக்குகள்**

----------------------------------------------

அமைச்சிற்கு சொந்தமான பொது வைப்புக் கணக்கின் 2018 யூன் 30 ஆந் திகதியிலுள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 174.23 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 யூன் 30 இல் உள்ளவாறு, செல்லுபடியாகும் காலம் 02 வருடங்கள் காலங்கடந்த வெளிநாட்டு உயர்ஸ்தானியராலய அலுவலகங்களின் பொதுவைப்புக் கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5.56 மில்லியன் தொகையானதாக இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வைப்புக்களின் மாதாந்த சுருக்க கூற்றுக்கள் நிதிப்பிரமாணம் 565(5) இன் பின்னர் வருகின்ற மாதத்தின் இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 யூன் 30 இல் உள்ளவாறு அமைச்சால் பராமரிக்கப்பட்ட 02 வங்கி கணக்குகள் ஒன்றின் 2016 மற்றும் 2017 உடன் தொடர்புடைய வங்கி கணக்கிணக்க கூற்றினுள் இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக ரூபா 1.3 மில்லியன் தொகை சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2018 யூன் 30 இல் உள்ளவாறு அமைச்சின் வங்கி கணக்கொன்றின் 06 மாதங்கள் காலங்கடந்த ரூபா 1.39 மில்லியன் தொகையான 12 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் லொஸ்-ஏஞ்சல்ஸ் துணைத்தூதரக பொது அலுவலகத்தில் ஏற்பட்ட யூ.எஸ்.டொலர் 1,583 தொகையான களவினை நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டம் மற்றும் சேதங்களாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வங்கி கணக்கிணக்கக் கூற்றினூடாக தொடர்ந்து வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.9 இணங்காமைகள்**

----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 ஏப்ரல் 01 ஆந் திகதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் OM/E7/6/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயங்களின் அலுவலகர்களிற்காக விஷேட படியானது செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 02

அலுவலகர்களுக்காக விஷேட படிகளின் மேலதிக கொடுப்பனவாக ரூபா 163,780 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலதிக கொடுப்பனவானது 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 1,486.20 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(அ) அமைச்சின் பதவியணி**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 95 | 92 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 06 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 361 | 337 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 125 | 124 | 01 |
| (v) | ஏனைய (அமைய ஒப்பந்த/ தற்காலிக் அடிப்படை) | 55 | 12 | 43 |
| | **மொத்தம்** | **643** | **571** | **72** |

**(ஆ) உயர்தானியராலயத்தின் பதவியணி**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **உள்ளக அடிப்படை (Home Based)** | | | | |
| (i) | சிரேஷ்ட / மூன்றாம் தரம் * | 262 | 232 | 30 |
| (ii) | இரண்டாம் தரம் ** | 254 | 254 | - |
| (iii) | முதலாம் தரம் *** | 07 | 04 | 03 |
| | மொத்தம் | 523 | 490 | 33 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **உள்ளக ரீதியில் வேலைக்கமர்த்துதல் (Locally recruited)** | | | |
| (i) | இரண்டாம் தரம் ** | 311 | 292 | 19 |
| (ii) | முதலாம் தரம் *** | 360 | 360 | - |
| | | ------- | -------- | ------- |
| | **மொத்தம்** | **671** | **652** | **19** |
| | | ==== | ==== | ==== |

* சிரேஷ்ட / மூன்றாம் தரம் - வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயத்தின் தலைவர், அமைச்சு ஆலோசனைளாளர், ஆலோசனையாளர், முதல் செயலாளர், இரண்டாம்தர செயலாளர், மூன்றாந்தர செயலாளர்

** இரண்டாம் தரம் - தூதருடன் இருப்பவர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலகர்களை உள்ளடக்கிய முகாமைத்துவ உதவி சேவையின் அலுவலகர்கள்

உள்ளக ரீதியில் வேலைக்கமர்த்தப்பட்ட இரண்டாம் தரம் - எழுதுவினைஞர், வரவேற்பாளர், சுருக்கெழுத்தாளர் , மொழிபெயர்ப்பாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலகர்களை உள்ளடக்கிய அலுவலகர்கள்

*** முதலாம் தரம் - சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் சுத்திகரிப்பு பதவியணியை உள்ளடக்கிய அலுவலகர்கள்